# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2166/34 - 2020 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2020.03.13

*2166/34 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்***

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதிய 2165/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள கட்டளையிலுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இ. மு. தலைப்பு இலக்கம் 03.02 மற்றும் 03.03 ஆகியவற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ள மீன்களின் (இ.மு. குறியீடு 0303.54 இன் கீழ் வருகின்ற மெக்கரல் மீன் நீங்கலாக) இறக்குமதிக்கு ஏற்புடைமையாகும் 10% எனும் அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு 150.00 ரூபா எனும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் இருந்து கிலோ கிராம் ஒன்றுக்கு 25.00 ரூபாவை அறவீடு செய்த பின்னரான எஞ்சிய தொகையினை தள்ளுபடி செய்வதற்கான கட்டளையினை, கப்பலேற்றுப் பத்திரத்தின் மூலம் 2020, மாச்சு 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கப்பலில் ஏற்றப்பட்டுள்ளவற்றின் இறக்குமதியை உறுதிப்படுத்தல், மீன்பிடி மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சின் பரிந்துரை பெறல் ஆகியவற்றுக்குட்பட்டு, இத்தால் மேற்கொள்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, மாச்சு 13.*


1A - PG 4966 — 567 (2020/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*